தேதி - 11.10.2022 **Prob.O.P.No.**3/2018 எ.சா.1 (லலிதா)

மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-

எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவர் சொல்லுக்கு கட்டுப்பட்டோம் அவர் விருப்பத்திற்கு மாறாக இருக்கமாட்டோம் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறப்பிற்கு பின்னிட்டும் அவருடைய விருப்பத்திற்கு மாறாக நான் எதுவும் செயல்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 14.02.1994 ம் வருடம் V.ராஜு என்பவர் சந்திரபிரகாஷ், ஞானசேகரன், ரவீந்திரன் ஆகிய மூன்று ஆண்மக்களுக்கும் கல்யாணி, மல்லிகாதேவி, ஜான்சிராணி மற்றும் என்னை கட்டுப்படுத்தி எழுதிக் கொடுத்த உயில் ஆவணம் ஆகும். அது **ம.சா.ஆ.**15 ஆகும். ம.சா.ஆ.15 ஆன உயில்ஆவணத்தில் 16 வது வரியில் நான் சம்பாதித்த வீடு என் ஆண்வழி வம்சத்தினரிடமிருந்து வரவேண்டுமென்றும், நான் மனோராஜியாய் விரும்புகிறேன் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 6 ம் எதிர்மனுதாரர் ரவீந்திரன் என்பவருடைய வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 6 ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் 6 ம் எதிர்மனுதாரருக்கு நான் திருமணம் செய்து வைக்காமல் அவருடைய வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.15 ஆன உயில் ஆவணத்திற்கு விரோதமாக நான் செயல்பட்டு வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் தாயார் காசியம்மாள் அவர் இறப்பிற்கு முன்னர் கடைசியாக 31.01.2018 ம் வருடம் அனைத்து ஆண்மக்கள், மற்றும் பெண்மக்களுக்கு சேரும் வகையில் எழுதி வைத்த ம.சா.ஆ.4 உயில் தான் உண்மையான உயில் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 உயிலானது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. 6 ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்வதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. 6 ம் எதிர்மனுதாரர நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் ம.சா.ஆ.4 உயிலானது உண்மையான உயில் என்று தெரிந்துவிடும் என்பதால் அவரை நான் தடுக்கவில்லை அவர் சார்பாக நான் வந்து சாட்சியம் அளிக்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்<br>மாவட்ட நீதிபதி,<br>மதுரை.